முருகப்பெருமான் துணை

**மகான் கூர்மானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.06.2023**, செவ்வாய்கிழமை

1. ஞானிகளை கலியிலும் படைக்க
ஞானமருளி வந்த அரங்கனே
ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் சோபகிருது விடை திங்கள்
2. திங்களிலே மூவேழீர் திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் **23** ம் நாள், **06.06.2023**, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் கூர்மானந்தர் யானும்
இங்கனமே அறிவுரை ஆசிதனை
இவ்வுலகோர் ஞானம்பெற உரைப்பேன்
3. உரைப்பேன் அஞ்ஞானம் மாயை
உலகத் துன்பங்கள் ஆன
குறைகள் அனைத்தும் விலகி
குருவருள் துணைபட வாழ்வில்
4. வாழ்வில் மாற்றங்கள் கண்டு
வரமென ஞான பலம்பெற
ஊழ்தனை வென்று சடுதி
உலகியல் பந்தங்களை கடந்து
5. கடந்து தன்னாய்வு வழி
கட்டாயம் மும்மலக் குற்றமும்
கடந்துமே மன பலம் திடம்
கருணையே வடிவான வண்ணம்
6. வண்ணமுடன் தன்னை தேற்றி
வரம் தரும் வடிவேலனை வணங்கும்
எண்ணமும் ஞானமும் கூடி
எக்கணமும் அதே சிந்தையாகி
7. ஆகியே குருவருள் கொண்டே
ஆறுமுகப் பெருமானை அடையும்
மிகையான வழிமுறைத் தேறி
மேலவர்கள் இணைந்து வந்து வழிகாட்ட

8. வழிகாட்ட ஞானவான்களாகவே
வையகத்தில் அரங்கமகான் வழி
அழியாமை கண்டுத் தேறுவர்
ஆபத்து கண்டம் அல்லலிலா

9. அல்லலிலா அனைத்து பாதுகாப்பும்
அடைந்து தேறி உயருவர்
வல்லமையான அரங்கன் தரும்
வரமான ஞான வழிகளோடு

10. வழிகளோடு அன்னதானமதின்
வழிமுறைகளையும் ஏற்று
தெளிவுபட அன்னதான சேவை
தேசமெங்கிலும் செய்து வர

11. வருகவே மனுதர்மம் குன்றா
வளர்ச்சியாக வள்ளல் நெறிபரவ
தரும ஞான ஆட்சிக் காலம்
தரணியும் கண்டு மாற்றம் பெறும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—